<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>
<u>**OS** 200/2009</u>

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 24.10.2025

Pw1 (தேவி)

**<u>குறுக்கு விசாரணை (10 ம் பிரதிவாதி தரப்பில்)</u>**

எனது முதல் விசாரணை விலாசம் தான் எனது ஆதார் அட்டையிலும் உள்ளது. தாவாவுடன் தாக்கல் செய்துள்ள புல வரைபடத்தில் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2.76 என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு பூர்வீக வகையில் வந்த சொத்து எவ்வளவு, கிரய வகையில் பாத்தியப்பட்ட சொத்து எவ்வளவு, ராமகிருஷ்ண அய்யங்காரின் சொத்து எவ்வளவு என்றால் என் தாத்தா பெரியண்ண கவுண்டர் கிரய வகையில் ஏக்கர் 1.00 ம் பூர்வீக வகையில் ஏக்கர் 1.25 லிருந்து 1.30 ம் பாத்தியம். மீதமுள்ள விஸ்தீரணம் குறித்து அது குத்தகை நிலம் என்றும் அது தங்கள் சுவாதீனத்தில் இருப்பதாக பெரியோர்கள் சொல்லி தனக்கு தெரியும் என்று கூறுகிறார். தாவா வரைபடத்தில் 40/3 தவிர மற்ற 3 காலைகளை பொறுத்து எந்த பகுதி பூர்வீகம் , எந்த பகுதி குத்தகை வகையில் எங்கள் சுவாதீனத்தில் வந்தது என என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். 40/3 ல் பாகப்பிரிவினையில் ராமகிருஷ்ண ஐயங்காருக்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. 40/3 ன் பழைய கச எண் 391 என்றால் சரிதான். கச 391 ன் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 4.34 என்றும் அதில் ராமகிருஷ்ண ஐயங்காருக்கு 2 ஏக்கர் பாத்தியம் என்றால் அவருக்கு ஒதுக்கப்பட்டது சரி ஆனால் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து தங்கள் பாகத்தில் இல்லை என தன் தாத்தா கூறியதாக கூறுகிறார். எந்த சொத்திற்கு குத்தகை தாரர் என என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். ஆதியில் பொங்கியண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து அவரது 4 மக்களுக்கு பிரிந்தது என்றால் சரிதான். ஏக்கர் 31.31 ல் எல்பிபீ வாய்க்காலுக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. 1954 ம் ஆண்டிற்கு முன்பு மேற்படி எல்பிபீ வாய்க்காலுக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டது. ஏக்கர் 31.31 ல் எல்பிபீ வாய்க்கால் செல்கிறதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த வரைபடத்தில்

உட்பிரிவு 31 , 42 எதற்காக காட்டப்பட்டுள்ளது என்றால் அது எல்பிபீ வாய்க்கால். நான் வரைபடத்தில் மற்ற சொத்துக்களை ஏன் காண்பித்துள்ளேன் என்றால் எனது சொத்தை மட்டும் தனியாக பிரித்து காட்ட முடியாது என்பதால் நான் மற்ற சொத்துக்களையும் காண்பித்துள்ளேன். தாவா வரைபடம் சர்வே வரைபடத்தின் அடிப்படையில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மொத்த விஸ்தீரணம் 31.31 என்றால் அந்த வரைபடம் அந்த வீஸ்தீரணத்தை தான் காட்டுகிறதா என தனக்கு தெரியாது என கூறுகிறார். 07.06.1943 ல் பெரியண்ண கவுண்டர் முத்துராஜாவிடமிருந்து ஒரு சொத்தை வாங்கினார் என்றால் சரிதான். அதில் பெரியண்ண கவுண்டரின் பங்கு ஏக்கர் 1.30 என்றால் சரிதான். அதை முத்துராஜ வகையறவிடமிருந்து வாங்கினார் என்றால் சரிதான். மாரப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 1/4 பங்கு ராமகிருஷ்ண ஐயங்காருக்கு சென்று விடுகிறது என்றால் ராமகிருஷ்ண ஐயங்கார் 6.35 ல் கிரயம் பெற்றுள்ளார். மாரப்ப கவுண்டருக்கு ஏக்கர் 31.31 ல் எவ்வித பாத்தியமும் இல்லை என்றால சரிதான். முத்துராஜ கவுண்டர் வகையறாவவும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்துவிட்டனர். அவர்களுக்கும் ஏக்கர் 31.31 ல் எவ்வித பாத்தியமும் இல்லை. சென்னிமலைகவுண்டருக்கு வரக்கூடிய பிரியாத 1/4 பங்கில் தான் சென்னிமலைகவுண்டருக்கு பிறந்த 6 மகன்களாகிய நல்லப்பகவுண்டர், பொங்கயிண்ண கவுண்டர், சின்னப்ப கவுண்டர், பழனியப்ப கவுண்டர், பெரியண்ண கவுண்டர் மற்றும் சுப்புராய கவுண்டர் ஆகிய 6 மகன்களுக்கும் சென்னிமலைகவுண்டருக்கு வரக்கூடிய 1/4 பாகம் பிரிந்தது என்றால் சரிதான். சென்னிமலை கவுண்டருக்கு ஏக்கர் 31.31 ல் வாய்காலுக்கு எடுத்துக கொண்ட நிலத்தை கணக்கில் எடுத்துக கொள்ளாமல் எவ்வளவு நிலம் பாத்தியம் என்றால் ஏக்கர் 7.80 பாத்தியம். 7.80 ல் 6 ல் ஒரு விகிதாசாரம் ஏக்கர் 1.30 ஆகும். என் மூதாதையர் சென்னிமலை கவுண்டர் ஆவண எண் 2009/1925 நாள் 24.06.1925 ஆவணத்தின் அடிப்படையில் ஏக்கர் 0.95-1/4 விஸ்தீரணத்தை விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான்.அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் தான் என்னிடம்காண்பிக்கப்படுவது. அது **பிசாஆ 1.** சாட்சி முன்வந்து சென்னிமலை கவுண்டர் அவரது மூத்த மகன் நல்லப்ப கவுண்டருக்கு அந்த சொத்தை விற்பனை செய்துள்ளதாக கூறுகிறார். சென்னிமலைகவுண்டருக்கு கிடைக்ககூடிய 1/4 பங்கு அதாவது ஏக்கர் 7.80 ல் ஏக்கர் 95-1/4 ஐ அவர் விற்பனை செய்துள்ளதால் ஏக்கர் 6.85 ஆக குறைந்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வழக்குரையில் பிசாஆ 1 கிரயம் பற்றி நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நல்லப்ப கவுண்டரின் வாரிசுகளை வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. விற்பனை செய்ததால் சென்னிமலை கவுண்டர் மகன் பெரியண்ண கவுண்டருக்கு அவரது பாகமாக ஏக்கர் 1.13

தான் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. பெரியண்ண கவுண்டருக்கு ஏற்கனவே கிரயம் பெற்ற வகையில் ஏக்கர் 1.03 வாசாஆ 5ன்படி பாத்தியப்பட் நிலையில் அவருக்கு கிடைககூடிய மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2.16 (எல்பிபீ வாய்க்கால் ஆர்ஜிதம் சேர்க்கப்படாமல்) என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மாரப்ப கவுண்டர், சென்னிமலை கவுண்டர், முத்து ராக்கியா கவுண்டர், கொழந்தையண்ண கவுண்டர் அவர்கள் ஆயுட்காலத்தில் பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். சென்னிமலை கவுண்டரின் மக்கள், மற்றும் கொழந்தையண்ண கவுண்டர் மக்களிடையே பாகப்பிரிவினை எதுவும் ஏற்பட்டுள்ளதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மாரப்ப கவுண்டர் முத்துராக்கியா கவுண்டரிடமிருந்து ஏக்கர் 31.31க்குள் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.மாரப்ப கவுண்டர் கிரயம பெற்ற விஸ்தீரணம் ஏக்கர் 1.82(ஆவண எண் 1599/1925) மற்றும் ஆவண எண் 1171/1935 ல் ஏக்கர் 1.92 ல் 1/4 கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்,ஆனால் சாட்சி மேற்படி கிரயங்கள் மாரப்ப கவுண்டர் கூட்டாக கிரயம பெற்றதாக கூறுகிறார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண் 1599/1925 மாரப்ப கவுண்டர் தனிப்பட்ட முறையில் ஏக்கர் 1.82 கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரய ஆவணம் **பிசாஆ 2.** 04.07.1935 தேதியில் கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் தான் என்னிடம் காண்பிக்கப்படுவது அது மாரப்ப கவுண்டர் மற்றும் பெரியண்ண கவுண்டர் சேர்ந்து ஏக்கர் 1.92 1/4 கிரயம் பெற்றுள்ளனர். அந்த கிரய ஆவணம் **பிசாஆ 3.** பிசாஆ 2 மற்றும் 3 கிரயங்கள் மூலமாக மாரப்ப கவுண்டருக்கு கிடைக்ககூடிய விஸ்தீரணம் ஏக்கர் 7.80லிருந்து ஏக்கர் 11.56 என உயர்ந்துள்ளது என்றால் சரிதான். ஏக்கர் 11.56லிருந்து தான் ராமகிருஷ்ண ஐயங்காருக்கு ஏக்கர் 6.55 அடமானம் மூலம் செல்கிறது என்றால் சரிதான்.அந்த ஏக்கர் 6.55 ஐ ராமகிருஷ்ண ஐயங்களார் ஏலத்தில் எடுதது அந்த சொத்தின் உரிமையாளர் ஆகிறார் என்றால் சரிதான். அந்த ஏக்கர் 6.55 விஸ்தீரணத்தை தான் எனது மூதாதையர்கள் குத்தகைக்கு எடுத்துள்ளனர் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை ராமகிருஷ்ண ஐயங்காரிடமிருந்து குத்தகை பெற்ற சொத்தில் எங்கள் பங்கை பொறுத்து குத்தகை தாரராக இருப்பதாக வழக்குரையில் பத்தி 8ல் ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். எந்த சொத்தை பொறுத்து நான் குத்தகை தாரராக அனுபவித்துள்ளதாக கூறுகிறோனோ அந்த சொத்தை பொறுத்து தான் நான் இந்த வழக்குரையில் எதிர்உடைமை பாத்தியத்தின் கீழ் விளம்புகை கோருகிறேன் என்றால் சரிதான். நான் குத்தகை தாரராக இருந்து கொண்டு சொத்தின் உரிமையாளராக விளம்புகை கோரி வழக்கை முன்வைக்க முடியாது என்றால் சரியல்ல. சொத்து எங்கள் சுவாதீனத்தில் தான் உள்ளது. சென்னிமலை கவுண்டர் மற்றும் கொழந்தையண்ண கவுண்டர் வகையறா சுமூகமாக தான் உள்ளனர் என்றால் சரிதான். என்னுடைய மூதாதையர்கள் சாகுபடி

செய்யும் குத்தகை தாரர் என பதிவு செய்துள்ளனர் என்றால் சரிதான். அதன் அடிபப்படையில் சட்டத்திற்கு அப்பாற்பட்ட வகையில் வெளியேற்றக்கூடாது என உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்து வழக்கில் தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். (வாசாஆ 28) வாசாஆ 28 ல் என் மூதாதையர்கள் பெற்ற தீர்ப்பு செல்லாது என நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. வாசாஆ 28 ஐ நான் ஒப்புக் கொள்கிறேனா என்றால் அதை ஏற்றுக் கொள்கிறேன். எங்களது நில உரிமையாளர் பாகப்பிரிவினை கோரி தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.10.24 15:57:21 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS